DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 121/2012 |
| Deposition of Witness for | PW 3 |
| Name | பன்னீர்செல்வம் |
| Father / Husband Name | நாகலிங்கம் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 14th October 2024.

---

**(எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

1) நான் தற்போது காளையார்கோவில் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்ற உத்தரவின் பேரில் காளையார்கோவில் காவல் நிலைய குற்ற எண். 248/2010 சட்டப்பிரிவுகள் 147, 148, 447, 427, 506(ii), 379 NH IPC என்ற வழக்கின் கோப்பின் நகல்களை தாக்கல் செய்கிறேன். **மேற்படி வழக்கு கோப்பு ம.சா.ஆ.1 ஆக (எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையுடன்) குறியீடு செய்யப்படுகிறது**. நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) புகார்தாரர் அளித்த புகார் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி புகார்மனு வின் பேரில் காளையார்கோவில் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யவில்லை என்றும் நீதிமன்ற உத்தரவின் பேரில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பிறகு யாரையெல்லாம் விசாரித்துள்ளார்கள் என்றால் சகாயமேரி, பிலவேந்திரன், முத்துராமு, பொன்னழகு மற்றும் முருகேசன் ஆகியோர்களை விசாரித்துள்ளார்கள்.

3) மேற்படி சாட்சிகளின் வீடுகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்படவில்லை. சம்பவ இடத்தின் அருகில் உள்ள நபர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு பிழை உள்ளது முடிக்கப்பட்டது சம்பந்தமாக அறிவிப்பு மனுதாரருக்கு வழங்கப்பட்டதா என்றால் கோப்புகளில் வழங்கப்பட்டதற்கான குறிப்புகள் இல்லை. மேற்படி வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை ஆகிய கோப்புகள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல அனுப்பியிருப்பார்கள்.

4) இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி யார் என்றால் உதவி ஆய்வாளர் ராமச்சந்திரன் விசாரித்துள்ளார். மேற்படி அதிகாரி தயார் செய்த இறுதி அறிக்கை கோப்புகள் இல்லை என்றால் கோப்புகளில் இல்லை. சாட்சிகளின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்ட தேதி திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரரின் ஆடுகளை எதிரிகள் திருடிச் சென்றது உண்மை என்றும் வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் வழக்கு பிழை உள்ளதாக முடிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

5) மனுதாரருக்கு காவல் துறை மூலம் உரிய நிவாரணம் கிடைக்காததால் நீதிமன்றத்தில் தனி நபர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரர் பாதிக்கப்பட்ட செயலுக்கு எதிரிகள் தண்டிக்கப்படக் கூடியவர் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1) இவ்வழக்கில் உதவி ஆய்வாளர் ராமச்சந்திரன் புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி மட்டும் தான் வழக்கு சம்பந்தமாக உண்மை தன்மைப் பற்றிக் கூறமுடியும் என்றால் சரியல்ல நான் ஆவணங்களின் அடிப்படையில் உண்மைத் தன்மையைக் கூறமுடியும். உதவி ஆய்வாளர் ராமச்சந்திரன் அவர் பதிவு செய்த வழக்குகளில் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறார் என்றால் சரிதான்.

2) இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான் முதல் தகவல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் நீதிமன்றத்திற்கு உடனே அனுப்பப்படும் என்றால் சரிதான். பிழை வழக்கு எனக் கருதி முடிக்கப்படும் வழக்குகளில் மனுதாரருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு நோட்டீஸ் சார்ஜ் செய்யப்பட்ட பிறகு அந்த நோட்டீஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றால் சரிதான். இவ்வழக்கில் உண்மை தன்மை இல்லாததால் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இவ்வழக்கை முடித்துள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கின் ஆவணங்களின் படி எதிரிகள் எந்த குற்றச் சம்பவத்திலும் ஈடுபட்டதாக தெரியவரவில்லை என்றால் சரிதான்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 14.10.2024,**
நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.